*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னை பின்னி நிறுவனத்தை அரசுடைமையாக்க வேண்டும் எனவும், தமிழக அரசு அதன் நிர்வாகப் பொறுப்பை உடனே ஏற்று, தனி அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டும் எனவும் அதில் பணியாற்றுகிற 7021 மனுதாரர்கள் அளித்துள்ள முறையீட்டு மனுவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் சமர்ப்பித்துள்ளேன். அதன்மீது உரிய ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இந்த அவையிலே நான் வலியுறுத்தி வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மனுக்கள் குழுவிற்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-50.மணி

7. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு).

(அ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்பு பட்டியல் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன,

பிரிவு 1 மற்றும் முகப்புரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

*25—1—1990-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1990 சனவரி, 27]

நெடுந்தலைப்பு

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன்): பேரவை முன்னுள்ள கேள்வி :

"நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு மாற்றுத் தலைவா அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In the enacting formula, for the expression Fortieth year" substitute the expression "Forty-first year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1990) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன் வடிவு 1990.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன்): அவசர சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோரில் ஒருவர் முன்மொழிவார். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :